# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය

## பொலிஸ் ஊடகப் பிரிவு

## POLICE MEDIA DIVISION

14 වන මහල,සුහුරුපාය,බත්තරමුල්ල

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය Date | 2026.06.04 පැය 1845 | දුරකථන අංකය Tel.NO | 011-2887973 | මගේ අංකය My NO | D/Media/Out/901/2026 | විද්‍යුත් ලිපිනය E-Mails | dir.media@police.gov.lk |


<u>**පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය වෙත වාර්තා වූ වැදගත් තොරතුරු.**</u>

***பொலிஸ் ஊடகப் பிரிவிற்கு பதிவான முக்கிய தகவல்கள்***

**01. වැඩිහිටි නිවාසයක ඇති වූ ගිනි ගැනීමකින් පුද්ගලයින් 12 දෙනෙකු ජීවිතක්ෂයට - අඟුරුවාතොට පොලිස් වසම.**

2026.06.03 වන දින සවස් කාලයේ අඟුරුවාතොට පොලිස් වසමේ බටගොඩ ප්‍රදේශයේ පවත්වාගෙන ගිය මානසික ආබාධ සහිත පුද්ගලයන් සිටින වැඩිහිටි නිවාසයක ගිනි ගැනීමක් හට ගෙන ඇති බවට ලද පණිවිඩයක් මත අඟුරුවාතොට පොලිස් ස්ථානයේ නිලධාරීන් කණ්ඩායමක් කඩිනමින් විමර්ශන ආරම්භ කර ඇත.

ඒ අනුව පොලිස් නිලධාරීන්, හොරණ ගිනි නිවීමේ ඒකකයේ නිලධාරීන් හා ප්‍රදේශවාසීන් එක්ව ගින්න මැඩ පැවැත්වීමට කටයුතු කර ඇති අතර මෙම ආයතනයේ මානසික රෝගී පුද්ගලයින් 71 දෙනෙකු නේවාසිකව සිට ඇත. ඉන් පුද්ගලයන් 12 දෙනෙකු මියගොස් ඇති අතර 50 දෙනෙකු බටගොඩ ප්‍රාථමික විද්‍යාලයේ රඳවා තැබීමට කටයුතු කර ඇත. මෙම ගින්න හේතුවෙන් තුවාල ලැබූ පුද්ගලයින් 07 දෙනෙකු ගල්පාත රෝහලට ඇතුලත් කිරීමෙන් පසුව වැඩිදුර ප්‍රතිකාර සඳහා හොරණ රෝහලට මාරු කර යවා ඇත.

2026.06.04 වන අද දින වයස අවුරුදු 32 ක් වන සේරුපිට ප්‍රදේශයේ පදිංචි වැඩිහිටි නිවාසයේ හිමිකරු නොසැලකිලිමත්කමින් මරණය සිදු කිරීම හා අයුතු සිරකර තබා ගැනීම ඇතුළු චෝදනා යටතේ අත්අඩංගුවට ගෙන හොරණ මහේස්ත්‍රාත් අධිකරණය වෙත ඉදිරිපත් කිරීමෙන් පසු 2026.06.11 වන දින දක්වා රක්ෂිත බන්ධනාගාර ගතකර ඇත.

ගින්නට හේතුව මෙතෙක් අනාවරණය වී නොමැති අතර අනතුර සිදුවූ ස්ථානය සම්බන්ධයෙන් මහේස්ත්‍රාත් පරීක්ෂණය සහ රජයේ රස පරීක්ෂකවරයාගේ ස්ථානීය පරීක්ෂාව සිදුකර ඇත.

සිද්ධිය සම්බන්ධයෙන් අඟුරුවාතොට පොලිසිය විසින් වැඩිදුර විමර්ශන සිදු කරනු ලබයි.

**முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் உயிரிழப்பு – அங்குருவாத்தொட்ட பொலிஸ் பிரிவு.**

2026.06.03 அன்று மாலை, அங்குருவாத்தொட்ட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட படகொட பகுதியில் இயங்கி வந்த மனநலக் குறைபாடுகளுடன் வாழும் நபர்கள் தங்கியிருந்த முதியோர் இல்லம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், அங்குருவாத்தொட்ட பொலிஸார் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொலிஸார், ஹொரணை தீயணைப்பு பிரிவினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். குறித்த இல்லத்தில் 71 மனநலப் பாதிப்புடைய நபர்கள் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 50 பேர் படகொட ஆரம்பப் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். தீ விபத்தில் காயமடைந்த 7 பேர் கல்பாத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹொரணை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

2026.06.04 அன்று, 32 வயதுடைய சேருபிட்ட பகுதியைச் சேர்ந்த முதியோர் இல்லத்தின் உரிமையாளர், அலட்சியத்தால் மரணம் ஏற்படுத்தியமை மற்றும் சட்டவிரோதமாக நபர்களை அடைத்து வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் அவர் 2026.06.11 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சம்பவ இடத்தில் நீதவான் விசாரணையும் அரச இரசாயனப் பகுப்பாய்வாளரின் (Government Analyst) இடத்திலான பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை அங்குருவாத்தொட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**02. ත්‍රීරෝද රථයක් මතට ගසක් කඩා වැටීමෙන් කාන්තාවන් දෙදෙනෙකු හා දරුවෙකු ජීවිතක්ෂයට – නාවලපිටිය පොලිස් වසම.**

2026.06.04 වන අද දින උදෑසන නාවලපිටිය පොලිස් වසමේ නාවලපිටිය මාපාකන්ද මාර්ගයේ මාපාකන්ද දකුණ ප්‍රදේශයේදී ගමන් කරමින් තිබූ ත්‍රීරෝද රථයක් මතට ගසක් කඩා වැටීමෙන් අනතුරක් සිදුව ඇත.

අනතුරින් බරපතල තුවාල ලැබූ ත්‍රීරෝද රථයේ රියදුරු, එහි පිටුපස ගමන් කල කාන්තාවන් දෙදෙනෙකු සහ පිරිමි දරුවෙකු නාවලපිටිය රෝහලට ඇතුලත් කිරීමෙන් පසු පිටුපස කාන්තාවන් දෙදෙනා සහ දරුවා මියගොස් ඇති බවට නාවලපිටිය පොලිස් ස්ථානයට ලද පණිවිඩයක් මත විමර්ශන ආරම්භ කර ඇත.

**මරණකාරියන් අවුරුදු 34 සහ 54 වයසේ සහ දරුවා වයස අවුරුදු 13 ක් වූ මාපාකන්ද දකුණ ප්‍රදේශයේ පදිංචිකරුවන් වේ.**

ත්‍රී රෝද රථ රියැදුරු නාවලපිටිය රෝහලේ නේවාසිකව ප්‍රතිකාර ලබයි. නාවලපිටිය පොලිසිය විසින් වැඩිදුර විමර්ශන සිදු කරනු ලබයි.

**පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය.**

***மரம் முறிந்து முச்சக்கர வண்டி மீது விழுந்ததில் இரு பெண்களும் ஒரு சிறுவனும் உயிரிழப்பு – நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவு***

*2026.06.04 அன்று காலை, நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலப்பிட்டி – மாப்பாகந்தை வீதியின் மாப்பாகந்தை தெற்கு பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டியின் மீது மரமொன்று முறிந்து விழுந்ததில் விபத்து ஏற்பட்டுள்ளது.*

*இந்த விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டி சாரதி, பின்னால் பயணித்த இரு பெண்கள் மற்றும் ஒரு சிறுவன் ஆகியோர் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அந்த இரு பெண்களும் சிறுவனும் உயிரிழந்துள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*உயிரிழந்தவர்கள் 34 மற்றும் 54 வயதுடைய பெண்களும், 13 வயதுடைய சிறுவனும் ஆவர். அவர்கள் அனைவரும் மாப்பாகந்தை தெற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள்.*

*முச்சக்கர வண்டி சாரதி தற்போது நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.*

*இந்த சம்பவம் தொடர்பாக நாவலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

***பொலிஸ் ஊடகப் பிரிவு***.